2000 FeTNA/TNF Convention Souvenir Article

# தமிழ்மொழியைக் கற்றுக்கொள்வதன் மூலம் கிடைக்க கூடிய பயன்கள்

கரூர் என்ற ஊர் தமிழ் நாட்டின் பழங்கால வணிக மையங்களில் ஒன்று. பழந்தமிழர் வெளிநாடுகளுடன் வணிகத் தொடர்பு வைத்திருந்ததாகத் தமிழிலக்கியத்தில் குறிப்புகள் உள்ளன. கரூரின் ற்றுப் பகுதிகள் அருகில் இன்றும் உரோமர் நாணயங்கள் கண்டுபிடிக்கப்படுகின்றன. அக்காலத் தமிழனைப் போல் இக்காலத் தமிழனும் வணிகத்தைத் தழுவி இலாபத்தை நாடுகிறான். இன்றைய கரூரின் முதன்மைத் தொழில் துணி ஏற்றுமதி. துண்டுகள் உள்ளாடைகள் முதலியவை பெரும் தொகையில் வெளி நாட்டினருக்காகச் செய்யப்பட்டு இலாபத்திற்காக அனுப்பப்படுகின்றன. கரூரின் பல துணி ஏற்றுமதிக் கடைகளில் கடவுள் படங்களுக்குப் பக்கத்தில் "லாபம்" என்று சாயத்தால் பெரிதாகக் கிறுக்கியிருப்பதை நான் பார்த்திருக்கிறேன். இந்த இலாப மனப்பான்மையைக் கொண்டு தான் பணம் என்ற ஒரே காரணத்தினால் தமிழ்நாட்டிலிருந்து தமிழர்கள் அமெரிக்காவுக்குச் செல்கின்றனர்.

தமிழ் மொழி சோற்றைப் போடாது என்று தமிழ் நாட்டில் எல்லோரும் கருதுகிறார்கள். அமெரிக்காவுக்குக் குடியேறிய பிறகும் இந்தக் கருத்து மாறுவதில்லை. ஆனால் அமெரிக்க நாட்டின் சூழல் வேறு. இங்கு வளரும் குழந்தைகளுக்குத் தமிழ்மொழி கற்றல் பயனுடையது. கீழ்வரும் துறைகளுக்குத் தமிழ் மொழி எவ்வெப்படி உதவும் என்று விளக்குகிறேன்.

**மருத்துவம்**

அடுத்த கல்வியாண்டில் மருத்துவக் கல்லூரியில் சேரந்து படிக்கப் போகிறேன். போன கல்வியாண்டு முழுவதும் நான் தமிழ் நாட்டில் தமிழ் மொழியைப் படித்துக்கொண்டிருந்தேன். தமிழரின் பண்பாட்டையும் பழக்கவழக்கங்களையும் கற்றுக்கொண்டேன். மருத்துவக் கல்லூரிகளுக்கு நான் நேர்முகத்தேர்வுக்காகச் சென்ற பொழுது என் தமிழ் நாட்டு அனுபவத்தைப் பற்றி விசாரிக்கப்பட்டேன். இந்த அனுபவம் எனக்கு ஒரு கூடுதலான தகுதி என்று எனக்கு நேர்முகத்தேர்வை நடுத்தினவர்கள் வெளிபடையாக என்னிடம் சொன்னார்கள். மருத்துவத்திற்கும் தமிழ் மொழி தேர்ச்சிக்கும் என்ன தொடர்பு என்று சிலர் ஐயப்படலாம். அமெரிக்க நாட்டில் மருத்துவர்கள் பல்வேறு பழக்கங்களையும் பண்பாடுகளையும் சார்ந்த நோயாளிகளைப் பார்த்துக்கொள்ள வேண்டியிருக்கலாம். ஆகவே, மருத்துவம் ஒவ்வொரு நோயாளியின் குறிப்பிட்டபண்பாட்டிற்கு இணங்கும் வகையில் இருப்பது தேவை. இரு வேறு பண்பாடுகளைத்

தெரிந்த மருத்துவர்கள் இந்தத் தேவையை எளிதாகப் புரிந்துகொண்டு அதற்கேற்றவாறு சிகிச்சை அளிப்பார்கள் என்று மருத்துவக் கல்லூரிகள் நம்புகின்றன.

மருத்துவம் படிப்பதற்கு எனக்கு இடமும் உதவித்தொகையும் வழங்கப்பட்டது. ஓராண்டு தமிழ் நாட்டில் தமிழைப் படித்திருக்காவிட்டால் எனக்கு இந்த உதவித்தொகை கிடைத்திருக்காது.

**தகவல் தொழில் நுட்பம்**

இயந்திரப் புரட்சி முடிந்து இப்பொழுது தகவல் தொழில் நுட்பப் புரட்சியில் (Information Technology Revolution) இருக்கின்றோம். தமிழ் நாட்டினர் பல பேர் தகவல் தொழில் நுட்பத்தைப் பயில்கின்றனர். இந்திய நாட்டு மாநிலங்களில் தகவல் தொழில் நுட்பக் கல்வியிலும் விழிப்புணர்விலும் தமிழ் நாடு முன்னணியில் இருக்கிறது. தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் தகவல் தொழில் நுட்பம் தொடர்பான வேலையில் சேர்வதற்கு அமெரிக்க நாட்டுக்கு வந்துகொண்டேயிருக்கிறார்கள். மேலும், இந்நாட்டுத் தகவல் தொழில் நுட்ப நிறுவனங்கள் அங்கு சென்று கிளை நிறுவனங்களைத் தொடங்கி வைக்கின்றன. ஆகவே, தகவல் தொழில் நுட்பத் துறையில் புதியதொரு நிறுவனத்தைத் தொடுங்குவதற்குத் தமிழ் மொழி தேர்ச்சி உதவும்.

**வணிகம்**

இந்திய நாட்டு மாநிலங்களில் வணிகம் தொடர்பான முதலீட்டில் தமிழ் நாடு முதல் இடத்திலோ இரண்டாம் இடத்திலோ உள்ளது. இங்குள்ளவர்கள் தமிழ் நாட்டில் வணிகத்தைத் தொடங்க விரும்பினால் தமிழ் மொழி அறிவு தேவைப்படும். தமிழீழம் புதிய நாடாகப் பிறக்கும்போது எண்ணற்ற பொருளாதார வாய்ப்புகள் ஏற்படும். அங்கும் வணிகம் செய்வதற்குத் தமிழ் மொழி தெரிந்திருக்க வேண்டும்.

செந்தில் குமார் சேரன்
webmaster@tamilclass.com

தமிழ்மொழியை இரண்டாம் தலைமுறைத் தமிழர்களுக்குக் கற்பிப்பது எனக்கு நுணுக்கமாகத் தெரியும். முன்னாள் மாணவனான நான் இப்பொழுது சிரியராகவும் இருக்கிறேன். பாடங்களை எழுதி இணையம் (Internet) வாயிலாக அவற்றைத் தமிழர்களுக்குத் தருகிறேன்.

பின்வரும் இணைய முகவரியில் அவற்றைப் பெற்றுக்கொள்க: www.tamilclass.com